# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

மனு எண்: 1474/2017/ ஊராட்சி

ஆணை எண்: 250 /2017

நாள்: 31/10/2017

எம். வேலு,
கீழ்வீராணம், காவேரிப்பாக்கம் ஒன்றியம்,
வேலூர் மாவட்டம். - **மனுதாரர்**

வட்டார வளர்ச்சி அலுவலர்,
காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்,
வேலூர் மாவட்டம். - **எதிர் மனுதாரர்**

## ஆணை

கீழ் வீராணம் ஊராட்சி, திரு. எம். வேலு அவர்களின் 26.10.2017 நாளிட்ட மனுவில் திருமதி. ரேணுகா தேவி கடந்த 20 ஆண்டுகளாக கீழ் வீராணம் ஊராட்சி அலுவலராக பணியுரிகின்றார். இவர் அரசு விதிகளுக்கு மாறாக ஏக்கர் கணக்கில் நிலம் வைத்திருப்பவர்களிடம் மாடு ஒன்றிற்கு ரூ.5000/– வீதம் பெற்றுக்கொண்டு மாடுகளை வழங்கிவிட்டார் என்றும், இதற்கு கால்நடை மருத்துவர் உடந்தை என்றும், பசுமை வீடு மற்றும் I.A.Y. வீடுகளுக்கு தலா ரூபாய் 25,000/– லஞ்சமாக பெற்றுள்ளார் என்றும், 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் பணம் பெற்றுக்கொண்டு ஒரே முகவரியில் உள்ள 3 நபர்களுக்கு வேலை கொடுக்கின்றார் என்றும், செய்யாத ரிப்பேர்களுக்கும், போடாத ஆழ்துளை கிணறுகளுக்கும் பொய்யான பில்/ரசீதுகளை சமர்ப்பித்தும் பணம் பெறுகின்றார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் கிராம ஊராட்சி அலுவலகத்திற்கு மாவட்ட நிர்வாகம் சார்பாக வழங்கிய தொலைபேசி, கணினி அனைத்தையும் அவர் வீட்டிற்கு எடுத்து சென்றுவிட்டார் என்றும், ஊராட்சி அலுவலகத்திற்கு

வருவதேயில்லையென்றும், கிராம சபை கூடும்போது கிராம மக்களுக்கு தகவல் தெரிவிப்பதில்லை என்றும் தெரிவித்து, தக்க நடவடிக்கை மேற்கொள் கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு கீழ்வீராணம் ஊராட்சியை சார்ந்தது ஆகும். எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ஜெயலாளர். 2/11

பெறுநர்

திரு. எம். வேலு,
கீழ்வீராணம் (மேட்டூர்),
கீழ்வீராணம் போஸ்ட்,
நெமிலி தாலுகா,
வேலூர் மாவட்டம் – 632 505.

நகல்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர் மாவட்டம்.
வேலூர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
உதவி பிரிவு அலுவலர் ஊராட்சி,
உதிரி–1